செ. வெ. எண் : 433 நாள் : 27.05.2010

# ஆரோக்யா 2010

## பத்திரிக்கைச் செய்தி

சென்னை நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் தமிழக அரசின் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையும் மைய அரசின் ஆயுஷ் துறையும் இணைந்து நடத்தும் ஆரோக்யா 2010 என்ற மருத்துவக் கண்காட்சி 27.05.2010 அன்று காலை 11.00 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்டது. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் முதன்மைச் செயலர்/ ஆணையர், திரு ரமேஷ் குமார் கன்னா, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் கண்காட்சிக்கு வந்தோர்களை வரவேற்று பேசினார்.

தமிழக அரசின் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாவினை குத்து விளக்கு ஏற்றி கண்காட்சியினை துவக்கி வைத்தார்.

புதுடெல்லி, இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தின் பொது மேலாளர் செல்வி நசீம் இஸ்ஹாக், மைய அரசின் ஆயுஷ் துறையைச் சார்ந்த ஆயுர்வேத முறை ஆலோசகர் மரு எஸ்.கே.சர்மா மற்றும் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலர் திரு வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப. ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மைய அரசின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திரு. எஸ் காந்திச் செல்வன் அவர்கள் கண்காட்சி கையேட்டினை வெளியிட்டு சிறப்புரை ஆற்ற தமிழக அரசின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு எம். ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் தலைமையுரையாற்றினார்,

அதன்பின் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் துவக்க பேருரை ஆற்ற இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை இணை இயக்குநர்(பொ)

ரு. ஏ.எம். அப்துல் காதர் அவர்கள் நன்றியுரை வழங்கினார். பின்னர் சென்னை அரசு யாகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் யோகா நேரடி சய்முறைக்குப் பிறகு நாட்டுப்பண் இசைக்க விழா நிறைவுற்றது.

27.05.2010 முதல் 30.05.2010 வரை நடைபெற உள்ள இம்மருத்துவக் கண்காட்சியில் ருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், னசரி மருத்துவச் சொற்பொழிவுகள், யோகாசன செய்முறைகள், மூலிகை கண்காட்சி, லைச்சுவடி கண்காட்சி, மருத்துவ நூல் கண்காட்சி ஆகியவைகளுக்கான பிரத்யோக ரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொது மக்களுக்கான மருத்துவ வினாடி வினா நிகழ்ச்சி நடத்தவும் விழாக் ழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர். இதில் வெற்றி பெறுபவர்களுக்கு மதிப்புயர்ந்த ருந்துகள் பரிசாக வழங்கவும் ஏற்பாடு செய்து உள்ளார்கள்.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9